DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 9/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | கௌரி |
| Father / Husband Name | பொன்னுசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 02.01.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது எலப்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஹரிஷ் எனது மகன் ஆவார். கடந்த 23.01.2023 ம் தேதி எனது மகன் சென்னை உள்ள எனது உறவினர் வீட்டு திருமணத்திற்கு சென்றுவிட்டு அவரது நண்பர் தமிழரசு இருசக்கர வாகனத்தில் எனது மகனை ஏற்றிக்கொண்டு மேல்மருவத்தூர் போகும்போது கருங்குழி அருகே இருசக்கர வாகனத்தின் டையர் வெடித்து விபத்து ஏற்பட்டு விபத்தில் எனது மகன் தலை, கண்ணம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அவரது நண்பர்கள் ஜனா, கோபால் ஆகியோர் மருத்துவமனைக்கு அழைத்து சென்று மேல் சிக்ச்சைக்காக அழைத்துச்சென்றார்கள். நான் செங்கல்பட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது 24.01.2023 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போடத்தெரியும். இறந்தவர் எனது மகன் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.